Sub Court, Eraniel O.S.**No.113/2021**

15.12.2022

வா.சா. 2 திரு. ராதாகிருஷ்ணன்

**சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.**

குறுக்கு விசாரணை

வாதியை எனக்கு 6 வருடங்களாகத் தெரியும். நான் மணவாளக்குறிச்சி கூட்டுறவு பண்டகசாலையில் விற்பனையாளராக பணியாற்றுவதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அதற்கான அடையாள அட்டையை தாக்கல் செய்ய முடியும். நான் மேற்படி பண்டகசாலையில் 20 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். நான் பணி நிரந்தரம் ஆகி 5 வருடங்கள் ஆகிறது. என்னை தனி அதிகாரி பணி நியமனம் செய்தார். பணி நிரந்தரம் செய்யப்பட்டது நிர்வாக குழு வருவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு. வாதி சொல்லும் கடையை ஜாகீர்உசைன் என்பவர் வாடகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். அவர் முறைப்படி வாடகைக்கு எடுத்து முறைப்படி ஒப்பந்தம் செய்து அட்வான்ஸ் கொடுத்து வாடகை கொடுத்து நடத்தி வருகிறார் என்றால் அது எனக்குத் தெரியாது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஜாகீர்உசைன் அத்துமீறி நுழைந்து கடை நடத்தி வருவதாக கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். வாதி மணவாளக்குறிச்சி கூட்டுறவு பண்டகசாலை, குளச்சல் கூட்டுறவு பண்டகசாலை மற்றும் சேரமங்கலம் கூட்டுறவு பண்டகசாலை மூன்றிலும் தலைவராக இருந்து வருகிறார். நான் சொல்வது போல் ஒரு நபர் மூன்று இடத்தில் தலைவராக இருக்க முடியாது என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. குளச்சல் பண்டகசாலையிலிருந்து வாதியின் வீட்டிற்கு பேருந்தில் 15 நிமிடத்திலும், இரு சக்கர வாகனத்தில் 10 நிமிடத்திலும் வரலாம். ஜாகீர்உசைன் நடத்தி வரும் கடைக்கு மின் இணைப்பு அளவீடு செய்யவோ சீர் செய்யவோ வேண்டும் என்றால் வாதியின் வீட்டுக் கேட்டை திறந்தால் தான் உள்ளே செல்ல முடியும் என்றால் சரிதான். வீட்டுக் கேட்டை பூட்டியிருந்தாலோ வாதி உள்ளே விட மறுத்தாலோ மேற்படி மின் இணைப்பை அளவீடு செய்யவோ, பராமரிப்பு செய்யவோ போக முடியாது என்றால் சரிதான். வாதி மாலை நேரங்களில் வீட்டில் தான் இருப்பார் என்றால் சரிதான். அதனால் தான் அவரை பார்ப்பதற்கு வீட்டிற்குச் சென்றேன். என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள கார் என்ன வகையான கார் என்றோ, அதன் பதிவு எண் என்ன என்றோ எனக்குத் தெரியாது. வாதியின் வீட்டில் சி.சி.டி.வி கேமரா உண்டு. அதில் நடப்பவைகள் பதிவாகும் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் எந்த தேதி, மாதம், வருடத்தில் வாதியின் வீட்டிற்கு வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. 3ம் பிரதிவாதி மின் இணைப்பை ஆய்வு செய்ய வரும் போது அங்கு வாதியின் மனைவி, வாதியின் மகன் மற்றும் வாதியின் மகனின் நண்பர்கள் இருந்தார்கள். வாதியின் வீட்டின் கேட்டிற்கு வெளியே வேறு நபர்கள் இருந்தார்கள். நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் மாலை சுமார் 05.19 மணிக்கு வாதி வீட்டு முற்றத்திற்குள் வந்துள்ளார் என்றும் அதன் பிறகு வாதியை எதிர்பார்த்து 1 முதல் 4 பிரதிவாதிகளும் அவர்களின் பணியாட்களும் மாலை சுமார் 05.40 மணி வரை அவரது வீட்டு முற்றத்தில் காத்திருந்திருக்கிறார்கள் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் மாலை 05.10க்கு அந்த இடத்திற்கு வந்து மாலை 06.00 மணி வரை இருந்தேன். பிரதிவாதிகள் ஆய்வு செய்ய வரும் விபரம் வாதிக்கும் அவருடைய மனைவி, மகனுக்கும் அவருடைய மகனின் நண்பர்களுக்கும் தெரியும் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. வாதிக்கும் ஜாகீர்உசைனுக்கும் பல நாட்களாக பிரச்சனை என்றால் சரிதான். அதனால் தான் வாதி மின் இணைப்பு பீஸ் கேரியரை பிடுங்கி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியும் அவருடன் பணியாளர்களும் மின் இணைப்பை ஆய்வு செய்ய வந்த போது வாதியும், வாதியின் மகனும், அவருடைய நண்பர்களும் தகராறு செய்தார்கள் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக 3ம் பிரதிவாதி மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது குற்ற எண்.32/2021 என வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவோ, சாட்சியாக சேர்க்கவோ இல்லை. வாதியின் மகன் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்று எனக்குத் தெரியாது. மின் இணைப்பு சம்மமந்தமாக புகார் வந்தாலோ, மின் இணைப்பில் தவறுகள் இருந்தாலோ அதை சீர் செய்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் பிரதிவாதிகளுக்கு அதிகாரமுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தான் மின் இணைப்பை ஆய்வு செய்ய வந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் வாதியும், வாதியின் மகனும் அவருடைய நண்பர்களும் பிரதிவாதிகளை அவர்களது பணியை செய்ய விடாமல் கெட்டவார்த்தைகளால் திட்டி தடை செய்தனர் என்றால் சரியல்ல. மேற்படி குற்ற வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வாதி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு நடந்த விபரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

நான் வாதி தலைவராக உள்ள பண்டகசாலையில் அவருக்கு கீழ் பணி புரிவதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.